2025 அக்டோபர் மாதம் 22 – ஆம் தேதி புதன்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

எம் .சி .ஓ .பி. நெம்பர் : 212/2023

2025–ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 22 – ஆம் தேதி புதன்கிழமை மனுதாரர் தரப்பு சாட்சியாகிய PW1 நபரின் வாக்கு மூலம் (1969–ஆம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.C.லதா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW1 – வீருத்தாய் |
| கணவர் பெயர்: | பால்கண்ணன் |
| ஊர்: | டி.மீனாட்சிபுரம் |
| வட்டம்: | ஆண்டிபட்டி |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | கூலிவேலை |
| வயது : | 40 |

தேதி : 22.10.2025.

முதல் விசாரணை: –

நான் இந்த மனுவில் 1ம் மனுதாரர் ஆவேன். மனு விபரங்கள் குறித்து நிரூபணவாக்குமூலம் தாக்கல் செய்கின்றேன். நான் இன்று தாக்கல் செய்யும் என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை நன்கு தெரிந்து கையொப்பம் செய்துள்ளேன். அதை என் சாட்சியமாக ஏற்க வேண்டுகின்றேன். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். அவற்றை மனுதாரர் தரப்பு சான்றாவணங்களாக ஏற்க வேண்டுகிறேன்.

| | |
|---|---|
| 1. | 20.02.2023ம் தேதியிட்டு மூலனூர் காவல்நிலைய குற்ற எண்.47/2023 பிரிவுகள் 279, 304ஏ இ.த.ச.ன்கீழ் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் ஒளிப்பதிவு நகல் – **ம.சா.ஆ.1.** |
| 2. | 20.02.2023ம் தேதியிட்டு எனது கணவர் பால்கண்ணன் என்பவருக்கு வழங்கப்பட்ட விபத்து பதிவேடு இணையதள நகல் – **ம.சா.ஆ.2.** |
| 3. | 20.02.2023ம் தேதியிட்டு எனது கணவர் பால்கண்ணன் என்பவருக்கு வழங்கப்பட்ட பிரேத பரிசோதனை சான்று இணையதள நகல் – **ம.சா.ஆ.3.** |
| 4. | 25.03.2023ம் தேதியிட்டு எனது கணவர் பால்கண்ணன் என்பவர் 19.02.2023ம் தேதி இறந்ததை காட்டக்கூடிய இறப்புச் சான்றிதழின் கணினி நகல் – **ம.சா.ஆ.4.** |

| | |
|---|---|
| 5. | 22.02.2023ம் தேதியிட்டு TN 33 N 3384 என்ற அரசு பேருந்து மற்றும் TN 57 N 2459 என்ற அரசு பேருந்து ஆகியவகைளின் மோட்டார் வாகன ஆய்வறிக்கைகளின் இணையதள நகல்கள் (எண்ணம் 2 ) – **ம.சா.ஆ.5.** |
| 6. | 24.03.2023ம் தேதியிட்டு இறந்துபோன எனது கணவர் பால்கண்ணன் என்பவருக்கு வழங்கப்பட்ட வாரிசு சான்றிதழின் கணினி நகல் – **ம.சா.ஆ.6.** |
| 7. | எனது மற்றும் 2 முதல் 4 மனுதாரர்களின் ஆதார் அடையாள அட்டையின் ஒளிப்பதிவு நகல்கள் (எண்ணம் 4) (அசலுடன் சரிபார்க்கப்பட்டு குறியீடு செய்யப்படுகிறது) – **ம.சா.ஆ.7.** |
| 8. | எனது மற்றும் 2 முதல் 4 மனுதாரர்களின் வங்கி கணக்குப் புத்தகத்தின் முதல் பக்கத்தின் ஒளிப்பதிவு நகல்கள் (எண்ணம் 4) (அசலுடன் சரிபார்க்கப்பட்டு குறியீடு செய்யப்படுகிறது) – **ம.சா.ஆ.8.** |
| 9. | இறந்துபோன எனது கணவர் பால்கண்ணன் என்பவருக்குரிய பான்கார்டு ஒளிப்பதிவு நகல் (அசலுடன் சரிபார்க்கப்பட்டு குறியீடு செய்யப்படுகிறது) **ம.சா.ஆ.9.** |
| 10. | இறந்துபோன எனது கணவர் பால்கண்ணன் என்பவருக்குரிய சம்பள இரசீது அசல் – **ம.சா.ஆ.10.** |
| 11. | இறந்துபோன எனது கணவர் பால்கண்ணன் என்பவருக்கு ஓட்டுநர் உரிமத்தின் ஒளிப்பதிவு நகல் (அசலுடன் சரிபார்க்கப்பட்டு குறியீடு செய்யப்படுகிறது) – **ம.சா.ஆ.11.** |

நான் மனுவில் கோரியவாறு மனுப்படி உத்தரவாக வேண்டி பிரார்த்திக்கிறேன்.

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>:–**

2ம் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 22.10.2025 அன்று புதன்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SANKAR Digitally signed by SANKAR Date: 2025.10.22 22:27:29 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி (FAC), தேனி.
22.10.2025